## 62

# “தேவனே, கிருபையாயிரும்!”

## லூக்கா 18:9-14

## ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

வேதாகமப் பள்ளி ஆசிரியை ஒருவர், இளம் மாணவர்களுக்கு, பரிசேயன் மற்றும் ஆயக்காரன் ஆகியவர்களின் உவமையை வாசித்துக் காண்பித்தார்:[1]

> அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து, அவர் [இயேசு] ஒரு உவமையைச் சொன்னார்: “இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று, ‘தேவனே! நான் பறிகாரர், அநியாயக் காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கி றேன். வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன், என் சம்பாத்தியத்தி லெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன்’ என்று தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று தன் கண்களை யும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு: ‘தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்’ என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்” என்றார் (லூக். 18:9-14).

பரிசேயனின் முரட்டுத்தனத்தைத் தவிர்த்து ஆயக்காரனின் தாழ்மையை வளர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஆசிரியை விளக்கப்படுத்தினார். அப்பெண்மணி இதைக் கூறி முடித்தபோது, தமது வகுப்பில் உள்ள மாணவர்களை ஜெபத்தில் வழிநடத்தினார்: “ஆண்டவரே, நாங்கள் பரிசேயனைப் போலிராததற்காக உம்மை ஸ்தோத்தரிக்கின்றோம் ...” ஒருவர் சரியான விஷயத்தைச் செய்ய முயற்சிக்கின்றபோது, பரிசேயர் செய்த அதே தவறைச் செய்யும் அபாயம் எப்போதும் உள்ளது.

நம்மில் பலர் நமது குழந்தைப் பருவத்தில் இருந்தே, பரிசேயன்

*ஆயக்காரன் பற்றிய இந்த உவமையைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். இருந்தபோதிலும், இதன் சத்தியங்களை இன்னமும் நினைவூட்டப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். இந்தக் கதையில் பொதியப் பட்டுள்ள ஒன்றிரண்டு பாடங்களை நாம் இன்னமும்கூட அறியாமல் இருக்கலாம். நாம் லூக்கா 18:9-14ஐப் படிக்கும்போது அறைகூவல் விடுக்கப்படுதலுக்கு ஆயத்தமாக இருங்கள்.*

## பிரசித்தி பெற்ற இருவர்

இயேசுவினுடைய உவமையின் நோக்கமானது எப்போதுமே உடனேயே தெளிவானதாக இருப்பதில்லை, ஆனால் இவ்வேளையில், அதன் நோக்கம் என்பது வேத வசனப்பகுதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது: "அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமா யெண்ணின சிலரைக் குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார்" (வ. 9). இந்த உவமையின் கடைசியில் கிறிஸ்து தமது தொகுப்புரையில் இந்த நோக்கத்தை மீண்டும் வலியுறுத்தினார்: "ஏனெனில் தன்னை உயர்த்துகிற வனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப் படுவான்" (வ. 14ஆ).[2]

தன்னையே உயர்த்துகின்ற மனிதனுக்கு உதாரணமாக இயேசு, ஒரு பரிசேயனைப் பயன்படுத்தினார். தாழ்மையின் உதாரணமாக அவர், ஒரு வரிவசூலிப்பவனைப் பயன்படுத்தினார். இவ்விருசாராரும் யூதத்துவ சமூகத் தில் இரு கோடிப் பகுதிகளைப் பிரதிநிதித்துவப் படுத்திய காரணத்தினால், இவ்விருவரும் தேர்ந்துகொள்ளப்பட்டிருக்கலாம்: பரிசேயன் என்பவன், ஒழுக்கரீதியான, மதரீதியான மற்றும் சமுதாய ரீதியான ஏணியில் மேல் படியில் இருந்தான், அதே வேளையில் ஆயக்காரன் என்பவன் அதன் கீழ் படியில் இருந்தான்.[3] இந்த உவமையில் இருந்து அதிக பட்சமான செயல் வலிவைப் பெறுவதற்கு, நாம் இவ்விரு மனிதர்களையும் பற்றிச் சற்று அறிந்து கொள்ளவேண்டும்.

### பிரசித்திபெற்றவர் எண். 1: பரிசேயன்

நாம் தொடக்கத்தில் தொடங்குவோம். "இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்" என்பவை இந்த உவமை யின் முதல் வார்த்தைகளாக உள்ளன (வ. 10அ). தேவாலயம் என்பது "ஜெப வீடாக" இருக்க வேண்டும் (லூக். 19:46) என்று தேவன் நோக்கங் கொண்டார்.[4] யூத ஆண்கள் மற்றும் பெண்கள், ஜெபிப்பதற்காக தேவாலயத்தில் தினமும் குறைந்தது மூன்று வேளையாவது ஒன்றுகூடுவார் கள்.[5] இந்த வேளைகளில் இரண்டு வேளைகள் பலிகள் செலுத்தப்பட்டன. ஆண்களும் பெண்களும், ஜெபிப்பதற்காகப் பெண்களின் முற்றத்தில் ஒன்றுகூடுவார்கள்; ஆனால் ஆண்கள் விருப்பப்பட்டால், இஸ்ரவேலர் களின் முற்றத்திற்குச் சென்று இவ்விதமாக தகன பலிகளைச் செலுத்தும் பீடத்தின் அருகில் நெருங்கிச் சேர முடியும். "இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்" என்று கேள்விப்படுவது

வியப்பளிப்பதாக இருப்பதில்லை.

இவ்விருவரில் ஒருவர் "பரிசேயராக" இருந்தார் (வ. 10ஆ). மீண்டுமாக, பரிசேயர் ஒருவர் ஜெபிப்பதற்குத் தேவாலயத்துக்குச் சென்றார் என்பதை அறிவது வியப்புக்குரியதாக இருப்பதில்லை. பரிசேயர்கள் மதரீதியான சடங்குகளில் மிகவும் விழிப்புணர்வுடன் இருந்தார்கள்.

சுவிசேஷ விவரங்களுக்கு நன்கு பழக்கமுடையவர்கள், அந்த எடுத்துரைப்புக்களில் பரிசேயர்களே அடிப்படையில் போக்கிரிகளாக இருந்தார்கள் என்பதை அறிகின்றனர்.[6] இருப்பினும் இந்த உவமையை நன்கு மதித்து உணருவதற்கு, பரிசேயர்களை நன்மை, நேர்த்தியானது மற்றும் கனப்படுத்தத் தக்கது ஆகியவற்றின் காவலர்களாக யூதர்கள் கண்ணோக்கினார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் தேவனை சேவிப்பதையும் "பரிசுத்த பாரம்பரியமாக" இருந்ததாகத் தாங்கள் கருதியவற்றைப் பாதுகாப்பதிலும் தீவிரமாக இருந்தார்கள். பழைய வழிமுறைமைகள் கடந்த காலத்தில்போல பயபக்தி செலுத்தப்படாதிருந்த ஒரு உலகத்தில், பரிசேயர்கள் நிலைப்புத் தன்மையின் அரண்களாக நின்றனர்.

வசனம் 11 மற்றும் 12ல் பரிசேயனின் சுய மதிப்பீட்டைச் சந்தேகப்பட நாம் காரணம் எதையும் கொண்டிருப்பதில்லை. இது மிகச் சரியானது என்று யூகித்ததில், இவர் மிக உயர்வான ஒழுக்கக் கோட்பாடுகளை கொண்டிருந் தார்: இவர் ஒரு பறிகாரராக இருக்கவில்லை; இவர் தமது வியாபார நடைமுறைகளில் நேர்மையாக இருந்தார். இவர் அநீதியானவராக இருக்க வில்லை; இவர் மற்ற மனிதர்களை நியாயமாக நடத்தினார்.[7] இவர் ஒரு விபசாரக்காரராக இருக்கவில்லை; இவர் தமது திருமண வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவராக இருந்தார். மற்றும் இவர், தேவனுடைய பிரமாணத் தைக் கடைப்பிடிப்பதில் விசுவாசமாயிருந்தார். உண்மையில், இவர் நியாயப்பிரமாணத்தின் வேண்டுகோள்களுக்கு அப்பாலும் செல்வதற்கு முயற்சி செய்தார்.[8] நியாயப்பிரமாணமானது, வருடத்தில் ஒரு நாள் - பாவநிவிர்த்தி நாள் அன்று - உபவாசிக்கும்படி குறிப்பிட்டிருந்தது (லேவி. 16:29, 30[9]); ஆனால் பரிசேயர்கள், வருடத்தில் 104 முறைகள் (ஒவ்வொரு திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில்[10]; மத். 6:16ஐக் காணவும்) உபவாசித்த னர். மீண்டுமாக, நியாயப்பிரமாணமானது தானியம், திராட்ச ரசம், எண்ணெய் மற்றும் மந்தைகள் ஆகியவற்றில் தசமபாகத்தை (10 சத விகிதத்தை) காணிக்கையாகக் கொடுக்க வேண்டும் என்று கட்டளை யிட்டிருந்தது (உபா. 14:22, 23ஐக் காணவும்); ஆனால் பரிசேயர்கள் தங்களிடம் இருந்த *எல்லாவற்றிலும்,* தோட்டத்தில் விளையும் மிகச் சிறிய கீரை வகைகளிலும் கூடத் தசமபாகம் செலுத்தினார்கள் (மத். 23:23ஐக் காணவும்).

நீங்கள் அநேகமாக, ஒரு பரிசேயரை உங்கள் அயலகத்தவராகக் கொண்டிருப்பதைப் பற்றிப் பொருட்படுத்த மாட்டீர்கள். அவர் ஒரு திடமான குடிமகனாயிருந்தார், நற்புகழ்ச்சி கொண்ட மனிதராயிருந்தார், ஒரு குடும்பத் தலைவராக, மற்றும் மதரீதியாகப் பலத்த உறுதிப்பாடு கொண்டவராக இருந்தார். நீங்கள் அவரைத் தேவாலயத்தில் கண்டு, அவர்

ஏன் அங்கு வந்தார் என்று கேட்டால், அவர் திகைப்படைந்தவராகக் காணப்பட்டு, "நான் வேறு எங்கிருக்க வேண்டும்?" என்று உங்களைக் கேட்பார் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. இன்றைய நாட்களில் இப்படிப்பட்ட ஒரு மனிதரைப் பற்றி நாம், "அவர் அங்கு [தேவாலயத்தில்] கதவுகள் திறந்திருக்கும் போதெல்லாம் இருக்கின்றார்" என்று கூறுவோம். மீண்டுமாக நான், பரிசேயன் தேவாலயத்திற்கு ஜெபிக்கச் சென்றதாக அறிவதில் வியப்பெதுவும் இருப்பதில்லை என்று கூறுகின்றேன்.

### பிரசித்திபெற்றவர் எண். 2: ஆயக்காரன்

இதற்கு மறுபுறத்தில், வரிவசூலிப்பவர் ஒருவர் ஜெபிப்பதற்காகத் தேவாலயத்திற்குச் சென்றார் என்பதை அறிவது அதிர்ச்சியாக உள்ளது. தேவாலயத்தில் யாரேனும் ஒரு மனிதரைக் காண்பதை நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள் என்றால், அம்மனிதர் ஒரு வரிவசூலிப்பவராகவே இருப்பார்.

KJV மற்றும் தமிழ் வேதாகமங்கள் இம்மனிதரை "ஆயக்காரர்" [publican][11] என்று அழைக்கின்றன, இது KJVயின் சொல்லாக்கங்களுக்குப் பழக்கப்படாதவர்களுக்கு சிறிதளவே அர்த்தப்படுவதாக உள்ளது. நவீன மொழியாக்கங்கள், "வரிவசூலிப்பவர்" மற்றும் "வரிசேகரிப்பவர்" என்பது போன்ற சொற்றொடர்களை பயன்படுத்தி, இதை நிவிர்த்தி செய்ய முயற்சிக்கின்றன. அரசு ரீதியான கையூட்டு என்பது பொதுவானதாகவும், அலுவலர்களுக்கு தரப்படும் கையூட்டானது ஒரு வேலையை நிறைவேற்று வதற்கான செலவுகளில் ஒரு பகுதியாக இருப்பதாகவும் கருதப்படும் நாடுகளில் இந்தச் சொற்றொடர்கள் செய்தித் தொடர்புக்குப் பயன்படுத்தப் படலாம். அதே வேளையில், அமெரிக்காவில் உள்ள மக்களை இது, IRS[12]ன் முகவரைப் பற்றி நினைக்கச் செய்து, தவறான மனப்பதிவை விட்டுச் செல்லலாம். ஆயக்காரர்கள்/வரி வசூலிப்பவர்கள் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகளை இவ்விடத்தில் கூறுதல் முறையாகிறது.

ரோமாபுரி அரசு, வரிகளை வசூலிப்பதில் வினோதமான முறை ஒன்றைக் கொண்டிருந்தது. பொதுவாகக் கூறுவதென்றால், அலுவலர்கள் ஒரு பகுதிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைக் கணக்கிட்டு, வரிகள் வசூலிப்பதற்கான உரிமையை மிக உயர்வான விலைக்குக் கேட்பவருக்குக் கொடுப்பார்கள். ஒப்பந்தக்காரர் தாம் ஒப்புக்கொண்ட தொகையை ரோம அரசுக்குச் செலுத்தும் வரையிலும், எஞ்சியதைத் தாமே வைத்துக்கொள்ள அவர் சுயாதீனம் கொண்டிருந்தார். செய்தித்தாள்கள், வானொலி, அல்லது தொலைக்காட்சி போன்ற தகவல் பரப்பும் சாதனங்கள் இல்லாதிருந்த அக்காலத்தில், மக்களில் ஒரு சிலரே, தாங்கள் கட்டாயமாக எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பதை அறிந்திருந்தார்கள். வரிவசூலிப்பவர் ஒரு பெரிய அளவிலான இலாபத்தை ஈட்ட முடிந்திருந்தது.[13]

இது தவறான பயன்பாட்டிற்கு ஆயத்தமாக்கப்பட்டிருந்த ஒரு ஏற்பாடாக இருந்தது. மக்களை ஏமாற்றுவதற்குப் பொருளாசை கொண்ட வரிவசூலிப்பவர்கள் நூற்றுக்கணக்கான வழிமுறைகளைக் கொண்டிருந்தார் கள். "நிலவரி ஒன்று இருந்தது ... தனிநபரின் சொத்துமீதான வரம்பு வரி ஒன்று இருந்தது ... ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வரிகள் இருந்தன,

துறைமுகங்களில், சாலைகளில், பாலங்களில், நகர வாயில்களில் மற்றும் இது போன்று பிற இடங்களில் வசூலிக்கப்படும் வரிகள் இருந்தன."[14]

யூதர்களைப் பொறுத்தமட்டில், சக இனத்தார் ஒருவர் வரிவசூலிப்ப வராகும்போது, அவ்வாறு ஆகின்றவர், காட்டிக் கொடுப்பவராகவும்[15] கள்வராகவும் ஆகிவிடுகின்றார். லூக்கா 18ல் வருகின்ற ஆயக்காரர் தம்மை ஒரு "பாவியாக" வகைப்படுத்திக் கொண்டார் (வ. 13), மற்றும் [இதைப் பற்றி] எவரொருவரும் அவருடன் வழக்காட மாட்டார்கள் (லூக். 19:5-7ஐக் காணவும்). வரிவசூலிப்பவர் என்பவர் சமூகத்தின் கசடுகளில் ஒரு பாகமாகக் கருதப்பட்டார், அவர் மதிப்புக்குரிய மக்களால் ஒதுக்கி வைக்கப்பட்டார்.[16] சட்டப்படியாக, இவ்வகைப்பட்ட ஒரு நபரை நீங்கள் உங்கள் அயலகத்தவ ராகக் கொண்டிருக்க விரும்ப மாட்டீர்கள்.

இம்மனிதர் தேவாலயத்திற்கு வந்தது ஏன் என்று நாம் அறிவதில்லை. இவர் வழக்கம்போல இங்கு வந்திருக்கவில்லை என்று கூறுவதில் நாம் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்று நான் நினைக்கின்றேன். தேவபக்தி யற்ற வாழ்க்கை முறைகளைக் கொண்டவர்கள் ஆராதனைக்கு வருவதை நடைமுறைப் பழக்கமாக ஏற்படுத்திக் கொள்வதில்லை; ஆராதனை ஊழியங்கள் அவர்களை சங்கடப்படுத்தக்கூடும். இருந்தபோதிலும், ஏதோ ஒன்று இம்மனிதரைத் தமது பாவம் நிறைந்த நிலைபற்றியும் தமக்கு தேவன் தேவை என்பது பற்றியும் அறியச் செய்திருந்தது. ஒருவேளை அவர்மீது துன்பம் ஏதேனும் விழுந்திருக்கலாம்: ஒருவேளை அவர் தமது உடல் நலத்தை இழந்திருக்கலாம், அல்லது ஒருவேளை இவருக்கு அன்பானவர்கள் யாரேனும் இறந்து போயிருக்கலாம் மற்றும் இவர், பணம் ஈட்டுதல் என்பது மட்டுமே வாழ்வு அல்ல என்று திடீரென உணர்ந்து அறிந்திருக்கலாம். ஒருவேளை இவர், ஒரு நீண்ட, இருளான, குளிர்மிகுந்த, உறக்கமற்ற இரவைச் செலவிட்டு, தமது வாழ்வைப் பரிசோதனை செய்து தாம் கண்ட வற்றை விரும்பாமல் இருந்திருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட இவர் ஜெபிப்பதற்காகத் தேவாலயத் திற்குச் சென்றார்.

## இரண்டு ஜெபங்கள்

காட்சியை உங்கள் மனதிற்குக் கொண்டு வாருங்கள்.

> [முதலில், பரிசேயன்] ஜெபம் செய்யும் மதிப்பு வாய்ந்த வேளையில் [வந்து சேருகின்றான்], இவன் பிரபுத்துவப் பார்வையுடன் [தேவாலயப்] படிகளில் வேகமாய் ஏறுகின்றான், எல்லாக் கண்களும் இவனையே நோக்குகின்றன. இவன் இஸ்ரவேலரின் முற்றத்தில் பிரவேசித்து, தகனபலி செலுத்தும் பீடத்தின் அருகில் நெருங்கு கின்றான். இவன் நேராக நின்று, தனது அகன்ற தோல்சுருள்களின் பெட்டியைக் காட்சிப்படுத்துகின்றான், மற்றவர்களை உற்றுநோக்கு கின்றான், மற்றும் நன்கு பழக்கமான குறிப்பிட்ட சில வார்த்தைகளை உரைக்க [தயாராகின்றான்].[17]

பின்பு, வரிவசூலிப்பவர் மறைவாய்க் காணப்படும்படி முயற்சி செய்தவாறு உள்ளே வருகின்றார். இவர் கூட்டத்தினூடே தமக்கு வழி ஏற்படுத்த முயற்சி செய்கையில், மக்கள் விலகி வழி விடுகின்றார்கள். கண்கள் கொந்தளிக்கின்றன, கைமுட்டிகள் நெறிபடுகின்றன.[18] என்னால் ஏறக்குறைய பின்வரும் கிசுகிசுப்பைக் கேட்க முடிகிறது: "இவனுக்கு இங்கு என்ன வேலை?" இம்மனிதர் தனிமையான ஒரு இடத்தைக் கண்டறிகின்றார், தமது கண்களைத் தாழ்த்துகின்றார், மற்றும் ஜெபிக்கத் தொடங்குகின்றார்.

***ஜெப எண். 1: பரிசேயன்***

அந்தக் காட்சியை மனதில் வைத்துக்கொண்டு, நாம் முதல் மனிதனைப் பற்றிய இயேசுவின் விவரிப்பைப் பரிசீலனை செய்வோம்: "பரிசேயன் நின்று, ... தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்" (லூக். 18:11அ, 12ஆ). இவன் ஜெபிப்பதற்கு நின்றான் என்ற உண்மையில் தனிச்சிறப்பு எதுவும் இருப்பதில்லை; அது ஜெபத்திற்கான சாதாரணமான உடல் நிலையாக இருந்தது மற்றும் இருக்கிறது (1 இரா. 8:22; மாற். 11:25). இவன் அநேகமாக [மற்றவர்களால் தன்னை] காணக்கூடிய இடத்தில் நின்றிருக்கலாம் (மத். 6:5ஐக் காணவும்).

இருப்பினும், "தனக்குள்ளே" என்ற வார்த்தையில் ஒரு தனிச்சிறப்பு இருக்கலாம். இவ்வார்த்தைகள், இவன் அமைதியாக ஜெபித்தான் என்று அர்த்தப்படக்கூடும், ஆனால் அது பரிசேயர்களின் பண்பாக இல்லாதிருந்தது. அவர்கள், தங்களின் "அதிக வசனிப்பான வார்த்தைகள் மற்றவர்களால் கேட்கப்பட வேண்டும்" என்று விரும்பினார்கள் (மத். 6:7[19]). "தனக்குள்ளே" (அல்லது "தனக்குள்ளாக") என்ற சொற்றொடரானது, ஜெபம் தேவனை நோக்கியதாக இருந்தாலும், உண்மையில் அது சுயத்தை நோக்கியதாக இருந்தது என்று சுட்டிக்காண்பிக்கலாம்.

ஜெபம் சரியாகவே தொடங்கிற்று: "தேவனே! உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" (லூக். 18:11ஆ). இது தேவனை ஒப்புக்கொண்டது மற்றும் ஸ்தோத்திரத்தை வெளிப்படுத்தியது (மத். 6:9; பிலி. 4:6). பரிசேயன் அத்துடன் நிறுத்தியிருந்தால், "நீதிமானாக்கப்பட்டவனாய்" தன் வீடு திரும்பியிருக்கலாம் (லூக். 18:14) - ஆனால் ஜெபம் தொடர்ந்தது.

"தேவனே! நான் மற்ற மக்களைப் போலிராததற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" (வ. 11ஆ, இ). இது உண்மையாகவே இருந்தது; இவனது வாழ்க்கை முறையானது சராசரியைவிட மேன்மையானதாக இருந்தது - மற்றும் அதை இவ்வுலகம் அறிய வேண்டும் என்று இவன் விரும்பினான். இவன் தனது சிந்தையில் இருந்த மக்களின் வகைகளைப் பட்டியலிட்டான்: "பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர்" (வ. 11ஈ). பின்பு இவன் சுற்றிலும் கண்ணோக்கினான். தூரத்தில் வரிவசூலிப்பவர் இருந்ததை இவன் கண்டான். அவர் வரிவசூலிப்பவர் என்று இவன் எவ்வாறு அறிந்தான் என்று எனக்குத் தெரியவில்லை. ஆயக்காரர் அநேகமாக, தனிப்பட்ட சீருடையை அணிந்திருக்கவோ அல்லது "நான் ஒரு ஆயக்காரன்" என்று எழுதப்பட்ட ஒரு விளம்பரத் தட்டியைச் சுமந்திருக்

*கவோ மாட்டார். அந்தப் பரிசேயன் அநேகமாக தன்னிடத்திலிருந்து சமீபத்தில் அநியாயமான வரியை அனுகூலப்படுத்திக் கொண்டவர் என்ற வகையில் இவரை அடையாளம் கண்டிருக்க வாய்ப்பிருந்தது. அநேகமாக இந்தப் பரிசேயன் புருவத்தை சுழித்து இன்னொரு மனிதனைச்[20] சுட்டிக் காண்பித்து, "[அல்லது] இந்த ஆயக்காரனைப் போலவும் இராததினால்" என்று கூடுதலாகக் கூறினான் (வ. 11உ).*

*இவன் அதே பகுதியில் நின்று கொண்டிருந்த சகபரிசேயர்களையோ அல்லது அருகில் இருந்த தேவாலயப் பணியாளர்களையோ சுட்டிக் காண்பிக்கவில்லை, மாறாக "தூரத்திலே நின்றிருந்த" (வ. 13) ஒரு வரிவசூலிப்பவரைச் சுட்டிக்காண்பித்தான். மனிதர்கள் தங்களை நல்லவர்களாகக் காட்சிப்படுத்த விரும்புகின்றபோது, அவர்கள் எவ்வித மாறுதலுமின்றித் தங்களை மிகச்சிறந்தவர்களுடன் அல்ல ஆனால் மிக மோசமானவர்களுடன்தான் ஒப்பிடுகின்றனர். கிளென் பேஸ் அவர்கள், "நீங்கள் போதிய அளவு கடினமாகத் தேடினால், நீங்கள் எப்போதுமே ஒப்பிடும் நோக்கங்களுக்கு ஒழுக்க ரீதியில் குறைவான தன்மையுள்ளவரைக் கண்டறிய முடியும்" என்று கூறினார்.[21]*

*பரிசேயன், தான் செய்யாதிருந்தவற்றைப் பட்டியலிட்ட பின்பு, தான் செய்திருந்த விஷயங்களைப் பெயரிட்டான்: "வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன், என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன்" (வ. 12). மற்ற நல்லறங்களையும் இந்தப் பட்டியலுடன் அவன் கூடுதலாக்கி இருக்க முடியும். "ஜெபம் பண்ணினான்" என்று (வ. 12) மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வினைச் சொல்லானது இவன் இந்த ஜெபத்தை வீணிலே தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தான் என்று சுட்டிக்காண்பிக்கிறது. பரிசேயர்கள் "நீண்ட ஜெபங்கள் செய்வதை" விரும்பினார்கள் (லூக். 20:47).*

*இயேசுவின் உரையைக் கேட்டவர்கள், பரிசேயனின் ஜெபத்தில் தவறு எதையும் கண்டிருக்க மாட்டார்கள் என்று அறிவது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். முதலாவதாக, ஒருவேளை இவன் கூறிய ஒவ்வொன்றும் உண்மையானதாகவே இருந்தது. எனது நண்பர்களில் ஒருவர் தமது சாதனைகளை என்னிடத்தில் கூறுகின்றபோது அவர், "வெறும் தம்பட்டம் அல்ல; உண்மைகளை மட்டுமே எடுத்துரைக்கின்றேன்" என்று கூறுகின்றார். இரண்டாவதாக, யூதத்துவச் சடங்காச்சாரமான ஜெபங்களில், அவர்கள் மற்றவர்களைப் போல் இராததற்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துதல் என்பது முன்னோடியாயிருந்தது. "ஒவ்வொரு நாளும், ஒரு யூத ஆண், தான் ஒரு புறஜாதியானாகவோ, அடிமையாகவோ அல்லது பெண்ணாகவோ படைக்கப்படாததற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்."[22]*

*பரிசேயனுடைய ஜெபத்தில் என்ன தவறு இருந்தது? இந்த மனிதன் எவற்றிற்காக ஜெபிக்கத் தவறினான் என்பது தொடங்கி, நாம் எண்ணற்ற குறைபாடுகளைப் பட்டியல் இட முடியும். இவன் தனது பாவங்களை மன்னிப்பதற்காகத் தேவனிடம் வேண்டுகோள் விடுக்கவில்லை. இவன் தெய்வீக பெலம் மற்றும் வழிநடத்துதலுக்காக வேண்டுகோள் விடுக்க*

*வில்லை. இவன் அந்த அறையின் மறுபுறுத்தில் இருந்த ஏழையான பாவிக்கு உதவும்படி தேவனிடத்தில் கேட்கவில்லை. இருப்பினும் இயேசு, குறிப்பிட்ட இரண்டு தவறுகளை முக்கியமாய்ச் சுட்டிக்காண்பிப்பதற் காகவே இந்தக் கதையைக் கூறினார்: (1) "தங்களை நீதிமான்களென்று நம்பி,'' மற்றும் (2) ''மற்றவர்களை அற்பமாயெண்ணின'' மக்களை வெளிப்படுத்த வேண்டுமென்பதே அவரது நோக்கமாக இருந்தது (18:9).*

*முதலாவது, பரிசேயன் "தன்னை நம்பினவனாக" இருந்தான். ஜெபத்தின் தொடக்க வார்த்தைகளில் இவன் தேவனை ஒப்புக்கொண்டா லும், இவன் ஆண்டவர்மீது நம்பிக்கையை வெளிப்படுத்தவில்லை - இவன் தன்னையே நம்பினவனாக இருந்தான். இவன் தன்னையே உயர்த்தினான் (வ. 14).*

*தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு உள்ளார்ந்த விருப்பத்தைக் கொண்டிருப்பதில் தவறு எதுவுமில்லை (லூக். 6:46). உபவாசித்தல் மற்றும் மிகச் சிறிய கீரைகளில்கூடத் தசமபாகம் செலுத்துதல் ஆகியவற்றைச் செய்து, ஆவிக்குரிய முறையில் "இரண்டாவது மைல் தூரமும் செல்லு வதற்கு"[23] பரிசேயன் செய்த முயற்சியில் கூடத் தவறு எதுவும் இருந்ததில்லை (மத். 23:23). இருப்பினும், ஒரு மனிதன், தனது செய்கைகள், தேவனைத் தனக்குக் கடமைப்பட்டவராக்கும் என்று நினைப்பது தவறாக உள்ளது. முந்திய ஒரு பாடத்திலிருந்து பின்வரும் வசனத்தை நினைத்துப் பாருங்கள்: "அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு: 'நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம்' என்று சொல்லுங்கள்" (லூக். 17:10). நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், நாம் நம்மையே நம்பிக் கொண்டிருக்கக் கூடாது; நமது நம்பிக்கை ஆண்டவர் பேரிலேயே இருக்க வேண்டும் (நீதி. 3:5).*

*''மற்றவர்களை அற்பமாயெண்ணினது'' (லூக். 18:9) என்பது பரிசேயனின் ஜெபத்தில் இருந்த இரண்டாவது பிரதானமான தவறாக உள்ளது. இவன், "தேவனே, நான் மற்ற மனுஷரைப் போல் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கின்றேன்" என்று கூறினான் (வ. 11). எனது கிரேக்க இடைவரி* (interlinear) *வேதாகமத்தின்படி, இவன் நேர்ப்பொருளில், "நான் மனிதர்களில் எஞ்சியுள்ள மற்றவர்களைப் போல் இராததற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று கூறினான். வேறுவார்த்தைகளில் சொல்லுவ தென்றால், "இங்கு நானும் எனது சகபரிசேயர்களும் இருக்கின்றோம் - மற்றும் பின்பு [இவனது மேல் உதடு சற்றே சுழிக்கப்படுவதை நான் சித்தரிக்கின்றேன்] எஞ்சியவர்கள் இருக்கின்றார்கள்'' என்று இவன் கூறினான்.*

*இந்தப் பரிசேயன் மற்ற மக்கள் கொண்டிருந்ததைக் காட்டிலும் அதிகமாக ஒழுக்கத் தராதரத்தைக் கொண்டிருந்தான் என்ற உண்மையை நாம் இவனுக்கு ஒதுக்கி வைக்கலாம். நியாயப்பிரமாணத்தின் நிபந்தனை களை நிறைவேற்றுவதற்கு மற்றவர்கள் செய்ததைக் காட்டிலும் இவன் அதிகக் கடினமாக முயற்சி செய்தான் என்பதில் சந்தேம் எதுவும் இல்லை. இருந்தபோதிலும், இவன் யாரிடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தானோ, அந்த ஆண்டவருடன் ஒப்பிடுகையில் இவன் ஒன்றுமற்றவனாக இருந்தான்.*

*"அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10).*

*ஒரு விவரிப்பு என் மனதிற்கு வருகிறது: உலகில் நான் வாழும் பகுதியில், சிவப்பு எறும்பு என்பது பொதுவாகக் காணப்படும் எறும்பு வகைகளில் ஒன்றாக உள்ளது. சில சிவப்பு எறும்புகள் சுமார் கால் அங்குல நீளம் உடையவையாக உள்ளன.[24] என் மனைவி அழைக்கும் ''சர்க்கரை எறும்புகள்" என்பவை உள்ளன, இவைகள் மிகச் சிறிய கருப்பு எறும்புகள் ஆகும், இவை ஒரு அங்குலத்தில் எட்டில் ஒரு பங்கு நீளமே உடையவைகள், இவைகள் சில வேளைகளில் வீடுகளுக்குள் படையெடுத்து வந்து உணவுக்காகத் தேடித் திரியும்.[25] ஒரு சிவப்பு எறும்பும் ஒரு சர்க்கரை எறும்பும் புறவழியில் நின்று கொண்டிருப்பதாகச் சித்தரித்துக் கொள்ளுங்கள். சிவப்பு எறும்பானது தனது உணர்கொம்பைத் தூக்கிக்கொண்டு, பின்வருமாறு கூறுகிறது (இதற்கு ஏராளமான கற்பனை தேவைப்படுகிறது): "ஆண்டவரே, நான் மற்ற எறும்புகளைப் போல் இராததற்காக - அங்குள்ள சின்னஞ் சிறிய சர்க்கரை எறும்பைப் போலக் கூட இராததற்காக உம்மை ஸ்தோத்திரிக்கின்றேன். நான் பெரியதாக, பலமுள்ளதாக மற்றும் மிகவும் அழகாக இருக்கின்றேன்." அந்தச் சிவப்பு எறும்பு தன் சிறு வாயினால் இவ்வார்த்தைகளைக் கூறி முடித்த உடனே, ஒரு இளம் பையன் புறவழியில் எட்டி நடை போட்டபடி வந்து, சிவப்பு எறும்பையும் சர்க்கரை எறும்பையும் மிதித்துச் சாய்க்கின் றான். எனது விவரிப்பின் கருத்து எளிமையானதாக உள்ளது: சிவப்பு எறும்பு சர்க்கரை எறும்பைக்காட்டிலும் பெரியதாக இருக்கலாம், ஆனால் ஒரு மனிதனோடு ஒப்பிடும்போது, அது மிகச் சிறியதாகவும் அற்பமானதாகவும் உள்ளது. அதுபோலவே, ஒரு மனிதன் ஒழுக்கரீதியாகவும் மதரீதியாகவும் இன்னொரு மனிதனைக் காட்டிலும் மேலானவனாக இருக்கலாம், ஆனால் இந்த அண்டத்தின் தேவனோடு ஒப்பிடும்போது, மனிதர்கள் யாவரும் "ஒன்றுமில்லை" என்பதாகவே உள்ளனர் (தானி. 4:35). ஆகையால் நம்மில் எவரும் ''மற்றவர்களை அற்பமாயெண்ணுதல்'' என்பது எவ்வளவு மதியீனமானதாக உள்ளது!*

***ஜெப எண். 2: ஆயக்காரர்***

*இயேசு, பரிசேயனின் அகம்பாவத்தை வரிவசூலிப்பவரின் தாழ்மை யுடன் நேரெதிராக ஒப்பிட்டார். ஆயக்காரர் தமது தகுதியின்மையை உணர்ந்தவராக, "தூரத்திலே நின்றார்" (லூக். 18:13அ). அநேகமாக இவர் ஜெபித்திருந்து நீண்ட நாட்கள் ஆகியிருக்கலாம் மற்றும் இவர் தேவாலயத் திற்கு வந்திருந்தே மிக நீண்ட நாட்கள் ஆகியிருக்கலாம். இவர் "தன் கண் களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல்" இருந்தார் (வ 13ஆ). சில வேளைகளில் மக்கள் ஜெபிக்கும்போது வானத்தை நோக்கிப் பார்க்கின்றனர் (சங். 123:1, 2), ஆனால் வரிவசூலிப்பவர் தமது பாவச் சுமையின் கீழ், தமது தலையைத் தாழ்த்தி நின்று கொண்டிருந்தார்.[26] மேலும் இவர், தன் மார்பிலே அடித்துக்கொண்டார் (லூக். 18:13இ), இது மிக ஆழமான வருத்தத்திற்கான கீழைநாட்டு வெளிக்குறிப்பாகும் (நாகூம் 2:7; லூக். 23:48).[27] இவர் தமது ஜெபம் கேட்கப்படுமா என்று கூட வியப்படைந்து இருக்கலாம்.*

பரிசேயனைப் போல, இவரும் தேவனை விளித்துத் தொடங்கி யிருந்தார், மற்றும் பரிசேயனைப் போல இவரது ஜெபமும் தம்மையே மையங் கொண்டிருந்தது - ஆனால் இவ்விரு ஜெபங்களும் எவ்வளவாக மாறுபட்டிருந்தன! ஆயக்காரரின் வேண்டுகோளானது வேதனைமிக்க வகையில் குறுகியதாக இருந்தது, தமிழில் இது நான்கே நான்கு வார்த்தை களை மாத்திரம் கொண்டிருந்தது:[28] "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (18:13ஈ).

பரிசேயனைப் போலின்றி, வரிவசூலிப்பவர் நிச்சயமாகவே தம்மிடத்தில் நல்லறங்கள் சிலவற்றைக் கொண்டிருந்தும் அவற்றைப் பட்டியலிடவில்லை. மக்களில் சிலர் முற்றிலும் மோசமானவர்களாக இருக்கின்றார்கள். மாறாக, இவர் தமது பாவம் நிறைந்த தன்மையைத் தாராளமாக ஒப்புக்கொண்டார்; இவர் சாக்குப்போக்கு எதுவுமின்றி, தாம் ஒரு பாவியாக இருந்ததை அறிக்கையிட்டார்.[29] உண்மையில் இவர் தாம் ஒரு பாவியாக இருந்ததை அறிக்கையிடுதல் மட்டுமே என்பதைக்காட்டிலும் அதிகமானவற்றையே செய்திருந்தார். KJVயில் "God be merciful to me the sinner!" என்றுள்ளது; ஆனால் கிரேக்க வேத வசனத்தில், உறுதிச் சுட்டுச் சொல்லானது ("the") ''பாவி'' என்ற வார்த்தைக்கு முன்னதாகத் தோன்றுகிறது. இது NASBயில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது: "God, be merciful to me, *the* sinner!" இந்த வரிவசூலிப்பவர் தம்மைத் தாமே, பாவநிறைவின் சுருக்கமாக, பாவிகளில் எல்லாம் மாபெரும் பாவியாகக் குறிப்பிட்டார். இவர், பாவிகளில் "பிரதான" பாவியாக இருப்பதாகத் தம்மைத் தாமே குறிப்பிட்டுக்கொண்ட பவுலுடன் உறவுமுறையொன்றை உணர்ந்திருப்பார் (1 தீமோ. 1:15).[30]

எல்லா மனிதர்களும் பாவிகளாகவே இருக்கின்றார்கள் என்ற உண்மையில் (ரோமர் 3:23), அவர் ஆறுதல் எதையும் காணவில்லை. இவர் தம்மை ஒப்பிடக்கூடிய இன்னொரு மோசமான பாவியைக் கண்டறிய முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை. இவர், (நாம் செய்திருக்கக் கூடியதுபோல), "நான் சுயநீதி கொண்ட பரிசேயனைப் போல் இராததற் காக உம்மை ஸ்தோத்திரிக்கின்றேன்'' என்று கூட ஜெபிக்கவில்லை. பரிசுத்தமான தேவனுடைய பிரசன்னத்தில் நின்றதில், இவர் நம்பிக்கை யிழந்தவராக, உதவியற்றவராக மற்றும் செய்ய வேண்டியதைச் செய்து முடிக்காதவராக உணர்ந்தார். தீர்க்கதரிசியான ஏசாயா ''ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறதைக் கண்ட[போது]" அவர், "ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்" என்று கதறினார் (ஏசா. 6:1, 5).

வரிவசூலிப்பவர், செல்வங்களையோ, புகழையோ, வெற்றியையோ, நல்ல உடல் நலத்தையோ அல்லது வாழ்க்கைக்குத் தேவையானவற்றையோ கூடக் கேட்கவில்லை: "தேவனே, கிருபையாயிரும்." "கிருபையாயிரும்" என்று மொழிபெயர்க்கப்பட்ட சொற்றொடரில், "கிருபை" என்பதற்குரிய வழக்கமான கிரேக்கச் சொல் பயன்படுத்தப்படவில்லை. இதற்குப் பதிலாக, ஆயக்காரார், நவீன மொழிபெயர்ப்பாளர்கள் பலரால், "நவீன மனிதருக்குப்

பழக்கமற்ற வேதாகம மொழிநடை'' என்று கருதிய காரணத்தினால் தவிர்க்கப்பட்ட ஒரு சொல்லைப் பயன்படுத்தினார். இவர் "propitiate" [''கிருபாதார பலி''] என்று பெரும்பாலும் மொழிபெயர்க்கப்படும் வார்த்தையின் வடிவம் ஒன்றைப் பயன்படுத்தினார்.[31]

"Propitiate" என்பது "கிருபாதார பலி" என்ற அடிப்படை அர்த்தம் தருகின்ற ஒரு இலத்தீன் சொற்றொடராக உள்ளது. இவ்வார்த்தையைப் பற்றிய விவரமான படிப்பை, காலம் அனுமதிப்பதில்லை, ஆனால் வேதாகமத்தில் கூறப்படும் பாவ நிவிர்த்தி செய்தலின் கருத்து இதற்குள் பொதியப்பட்டுள்ளது. தேவன் தமது இயல்பின் காரணமாகப் பாவத்தைப் பொறுத்துக் கொள்ளக் கூடாதவராக இருக்கின்றார் (ரோமர் 1:18); பாவம் தண்டிக்கப்பட வேண்டும் (ரோமர் 6:23அ; கலா. 6:7). தேவகோபத்தை சாந்தப்படுத்தத்தக்க, மனிதன் தனக்குள்ளாகவோ அல்லது தனக்குத் தானாகவோ, ஒன்றும் செய்ய இயலாது (ரோமர் 1:18; 3:9, 10; ஏசா. 64:6). பாவத்தின் பிராயசித்தத்திற்கான பலிகளைத் தேவன் அளித்திருந்தார். பழைய ஏற்பாட்டில், மிருக பலிகள் செலுத்தப்பட்டன (லேவி. 1; 3-5; எபி. 9:22ஐக் காணவும்). புதிய ஏற்பாட்டில், நமது பாவங்களுக்காக, பூரணமும் கடைசியுமான இயேசுவின் பலியானது சிலுவையில் செலுத்தப்பட்டுள்ளது (1 கொரி. 15:3).

தேவாலயத்தில், மக்களின் பாவங்களுக்காக மிருக பலி செலுத்தப்பட்ட நேரத்தில் ஆயக்காரர் அங்கு இருந்ததால், இவரது சிந்தையில் இந்தச் சொல்லாக்கம் வந்தது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[32] எவ்வகையிலும், கிருபாதார பலி என்ற வார்த்தையை இவர் பயன்படுத்தியது என்பது, இவர் பாவத்தின் "மிக அதிகமான பாவம் நிறைந்த தன்மையை"[33] மற்றும் மன்னிப்பிற்கான தமது மிக அவசியமான தேவையை உய்த்துணர்ந்தார் என்று காண்பிக்கிறது. குற்றத்தின் பாரத்தின் கீழ் சுமை ஏற்றப்பட்டிருந்த நிலையில் (சங். 40:12ஐக் காணவும்), இவர் நிவாரணத்திற்காகக் கதறினார்: "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (லூக். 18:13).

நாம் ஒவ்வொருவருமே பாவம் செய்து ''தேவமகிமையற்றவர்களானோம்'' (ரோமர் 3:23). "நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது" (1 யோவா. 1:10). தேவனுடைய பரிசுத்தம் என்ற பாயொளி வெளிச்சத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட நிலையில், நாம் யாவரும் கிருபைக்காக/இரக்கத்திற்காகக் கதற [மட்டுமே] முடியும்: "தேவனே! பாவிகளாகிய எங்கள்மேல் கிருபையாயிரும்."

## இரண்டு சாத்தியக்கூறுகள்

இயேசு [இந்தக் கதையை] முடிக்கையில், அவர் அதிகாரத்துடன் உரைத்தார்: "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக். 18:14அ). அதாவது, "மனிதர்களின் இருதயங்களைக் காணக்கூடியவர் என்ற வகையில் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தேவனுடைய சிந்தையை அறிந்தவர் என்ற வகையில் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்."

***சாத்தியக்கூறு எண். 1: பரிசேயன்***

*முதலில் கிறிஸ்து, சமூகத்தின் நிலைப்பாட்டில் இருந்து இந்தப் பரிசேயன் மிகவும் கவனிக்கத்தக்கவனாக இருந்தான் என்று சித்தரித்திருந் தார், ஆனால் இம்முறைமையைத் திருப்பிப் போடுவதன் மூலம் அவர் இந்தக் கதையை முடித்தார்: "அவனல்ல, இவனே [வரிவசூலிப்பவரே] நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (வ. 14அ, ஆ). மற்ற மனுஷரைப் பற்றி இகழ்ச்சியாகப் பேசியிருந்த பரிசேயன் "மற்றவனுடைய" தகுதி நிலைக்குக் கீழாக்கப்பட்டான். பரிசேயன் நீதிமானாக்கப்படாமல் "தனது வீட்டுக்குத் திரும்பினான்" என்பதே வசனம் 14ன் தெளிவான மறைகருத்தாக உள்ளது.*

*பரிசேயன் தேவாலயத்திற்கு வரும்போது கொண்டிருந்த அதே சுயதிருப்தியுடன், தான் ஒரு "ஜெபம் அற்ற ஜெபத்தை" ஜெபித்திருந்தது பற்றி அறியாமலேயே தேவாலயத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்று இருக்கலாம். மைக்கேல் வில்காக் அவர்கள், இவனது ஜெபமானது, "தேவனு டைய கவனிக்கும் காதுகளுக்குச் செல்லத் தனது வழியில் தனியே பறப்பதற்குத் தரையிலிருந்து புறப்படுதல் மிகவும் கடினமாகும்படிக்கு, சுயபாராட்டுதலினால் அதிகமாய்ச் சுமையேற்றப்பட்டிருந்தது" என்று கூறினார்.[34] ரிச்சர்டு டிரென்ச் அவர்கள், பரிசேயனின் ஜெபமானது தூபம் போன்று மேலே எழும்புவதற்குப் பதிலாக, "புகை போன்று இவனது கண்களுக்குள்ளேயே திருப்பி வீசுவதாக இருந்தது" என்று எழுதினார்.[35]*

*இவன் தனக்குள் தேவனுக்கு இடமிராதபடி தன்னையே நிறைத்தவ னாக வந்திருந்தான். R. C. H. லேன்ஸ்கீ அவர்கள் கூறியபடி, "முழுவதும் நிறைந்துள்ள ஒரு பாத்திரத்தில் எதையும் ஊற்றுதல்" என்பது கர்த்தரால் முடியாது.[36] "ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப் படுவான்" (வ. 14இ) என்பதால், கடைசியில் இந்தப் பரிசேயன் தன்னை உண்டாக்கினவருக்கு முன்பாக நின்றபோது அது இவனுக்கு எவ்வளவு அதிர்ச்சியாக இருந்திருக்கும்!*

***சாத்தியக்கூறு எண். 2: ஆயக்காரர்***

*"தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று ஜெபித்த வரிவசூலிப்பவரின் நிலை என்னவாயிற்று? இவர், "நீதிமானாக்கப் பட்டவராய்த் தம் வீட்டுக்குத் திரும்பிப் போனார்" (வ. 14). இவரது மீறுதல்கள் துடைத்தெறியப்பட்டது; இவர் தமது அக்கிரமங்களில் இருந்து கழுவப் பட்டார்; இவர் தமது பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டார் (சங். 51:1, 2). "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ" அவ்வளவு தூரமாக இவரது மீறுதல்கள் இவரிடத்திலிருந்து நீக்கப்பட்டது (சங். 103:12). "பரிசேயன் நன்முறையில் உணர்ந்தவனாக, அகம்பாவம் நிறைந்தவனாகப் புறப்பட்டுச் சென்றான். ஆயக்காரரோ, மேன்மையாக உணர்ந்தவராக, சமாதானம் நிறைந்தவராகப் புறப்பட்டுச் சென்றார்."[37]*

*G. கேம்ப்பெல் மோர்கன் அவர்கள், "இம்மனிதர் அடுத்த நாளில் மீண்டும் தேவாலயத்திற்கு வந்தார், ஆனால் அதே வழிமுறையில் வந்திரா*

*திருந்தார் என்று நான் நினைக்கின்றேன்," என்று கூறினார்.[38] இவர் முதன் முறை பாவச் சுமையுடன் வந்திருந்தார். இரண்டாவது முறை, இவர் மன்னிப்பு மற்றும் நன்றியுடைமை ஆகியவற்றின் ஆழம் செறிந்த கருத்துணர்வுடன் வந்திருப்பார். தம்மையே தாழ்த்தின இவர் உயர்த்தப் பட்டிருந்தார் (லூக். 18:14).*

## *முடிவுரை*

*இது ஒரு சில கேள்விகளுக்கான - உங்களுக்காக நானோ அல்லது எனக்காக நீங்களோ பதிலளிக்க இயலாத கேள்விகளுக்கான - நேரமாக உள்ளது:*

- *இந்தக் கதையானது இரண்டு பிரசித்திபெற்றவர்களைச் சித்தரிக்கிறது. இவற்றில் உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது எது? தங்களுக்கு இரட்சிப்பு தேவையில்லை என்று நினைக்கின்றவர் களைக் கர்த்தரால் இரட்சிக்க முடியாது.*
- *இந்தக் கதையானது இரண்டு ஜெபங்களைப் பற்றிக் கூறுகிறது. இவற்றில் எந்த ஜெபம், நீங்கள் ஜெபிக்கின்ற ஜெப வகைக்கு நெருங்கியதாக உள்ளது?*
- *இந்தக் கதையானது இரண்டு சாத்தியக்கூறுகளை கருத்தாகத் தெரிவிக்கிறது: உயர்த்திக் கொள்ளுதல் அல்லது தாழ்த்திக் கொள்ளுதல். "நான் இப்போது இருக்கின்றபடியே தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டுமென்றால், இவற்றில் எது எனது பங்காக இருக்கும்?" என்று கேட்டுக் கொள்ளுங்கள்.*

*குளோவிஸ் G. சாப்பல் அவர்கள், மருத்துவர் மேக்லூர் அவர்களின் வரலாற்றைப் பற்றிக் கூறினார்.[39] இந்த மருத்துவர், நாற்பது ஆண்டுகள் காலமாக, சுயநலம் எதுவுமின்றி தம்மை, நோயாளிகளுக்காகப் பணி செய்வதில் அர்ப்பணித்திருந்தார். கடைசியில், இளைப்படைந்தவராக, இவர் தமது பயணத்தின் முடிவை அடைந்தார். இவர் தமது பழைய நண்பர் ஒருவரிடத்திற்குத் தகவல் அனுப்பி, தமது தாயின் வேதாகமத்திலிருந்து வாசிக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். அந்த நண்பர், பலருக்கு ஆறுதல் அளித்துள்ள வசனங்கள் கொண்ட யோவான் 14ம் அத்தியாயத்தைத் திருப்பினார், ஆனால் இந்த மருத்துவர் அவரை [வாசிப்பதை] நிறுத்தினார். "அது என்னைப் போன்றவர்களுக்கானதல்ல. அது எனக்கு நன்மையான தல்ல. புத்தகத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள், எனக்காகக் கடந்த ஒரு மாத காலமாக ஒவ்வொரு இரவும் வாசித்த வேத வசனப்பகுதிக்கு அதுவாகவே திறந்துகொள்ளும்" என்று கூறினார். அறிவுறுத்தப்பட்டபடியாக நண்பர் செய்தபோது, வேதாகமம் லூக்கா 18:13ஐத் திறந்தபடி கிடந்தது: "ஆயக்காரன் தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: 'தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்' என்றான்.'' இந்த மருத்துவர், ''அது, எனக்காகவோ அல்லது தனது வாழ்வின் முடிவை நெருங்கிச் சேர்ந்து, தனக்குத் தானே எந்த ஒரு நல்ல வார்த்தையும் கூற இயலாத பழைய*

*பாவிகள் எவரொருவருக்குமாகவோ எழுதப்பட்டிருக்கலாம்'' என்று கூறினார். லூக்கா 18:13, மருத்துவர் மேக்லூருக்காக மாத்திரம் எழுதப் பட்டிருந்ததில்லை; இது உங்களுக்காகவும் எனக்காகவும்கூட எழுதப் பட்டிருந்தது.*

*தேவனுடைய இரக்கம்/கிருபை தேவையில்லை என்றிருக்குமளவுக்கு எவரொருவரும் அவ்வளவு நல்லவராக இருப்பதில்லை, மற்றும் எவரொரு வரும் தாம் தேவனுடைய இரக்கத்திற்கு/கிருபைக்கு அப்பால் இருக்கு மளவுக்கு அவ்வளவு மோசமானவராக இருப்பதுமில்லை. ஆண்டவருடைய அழைப்புக்கு நீங்கள் பதில்கொடுக்க வேண்டுமென்றால்,[40] வாருங்கள் அவருடைய கிருபைத் தன்மையின்மீது உங்களைக் கிடத்துங்கள்: "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்."*

---

*குறிப்புகள்*

*[1]பல ஆண்டுகளாக இது, "பரிசேயன் மற்றும் ஆயக்காரன் ஆகியோரின் உவமை" என்று அறியப்பட்டுள்ளது. "ஆயக்காரன்" என்பது "வரிவசூலிப்பவன்" என்பதற்கு KJVயில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடராக உள்ளது. இந்தப் பிரசங்கத்தில், "ஆயக்காரன்" மற்றும் "வரிவசூலிப்பவன்" என்ற சொற்றொடர்கள் ஒன்றுக்குப் பதில் இன்னொன்று இருக்கக்கூடிய வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. [2]இயேசு, லூக்கா 18:14ஆ-வின் சத்தியத்தை வலியுறுத்த விரும்பினார் (லூக். 14:11; மத். 23:12ஐக் காணவும்). [3]இந்த விவரிப்பானது, நான் வாழும் இடத்தில் உள்ள "சமூக ஏணி" என்ற பொதுவான சொற்றொடரின் அடிப்படையில் அமைந்துள்ளது. நீங்கள் வாழும் இடத்தில் நீங்கள் இப்படிப்பட்ட ஒரு சொற்றொடரைப் பயன்படுத்தாதிருப்பினும், உயர்ந்த நிலைகளுக்கு ஏறிச் செல்லுதல் என்ற கருத்து புரிந்துகொள்ளப்படுவதாக இருக்க வேண்டும். [4]தேவாலயத்திற்கு அருகில் வாழ்ந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அங்கு ஜெபிக்கச் சென்றார்கள்; அங்கிருந்து அதிக தூரத்தில் வாழ்ந்தவர்கள், தேவாலயத்தை நோக்கி ஜெபித்தார்கள். [5]ஜெபத்திற்காக இவ்வாறு ஒன்றுகூடுதல், ஒரு நாளைக்கு நான்கு முறைகள் நடைபெற்றன என்று சில எழுத்தாளர்கள் கூறுகின்றனர். ஏற்படுத்தப்பட்ட இந்த நேரங்களைத் தவிர, யூதர்கள் தாங்கள் ஜெபிக்க விரும்பும் மற்ற நேரங்களிலும் தேவாலயத்திற்குச் செல்ல முடிந்தது. [6]இந்த விவரங்கள் எழுதப்பட்ட வேளையில் (கி.பி. 60-65) பரிசேயர்கள் - சபைக்கு உள்ளாகவும் (அப். 15:5) புறம்பாகவும் (அப். 23:6) - சபைக்கு எதிரான கலகத்தின் பிரதான ஆதாரமூலமாக இருந்தார்கள் என்ற காரணத்தினால், இவர்களின் போக்கிரித்தனத்தை, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு சுவிசேஷ விவரங்களை எழுதிய எழுத்தாளர்கள் வெளிப்படுத்தினார்கள் என்று சிலர் நினைக்கின்றார்கள். [7]இது எல்லாப் பரிசேயர்களுக்கும் உண்மையானதாக இருந்ததில்லை (மத். 23:14ஐக் காணவும்), ஆனால் இது இந்தப் பரிசேயனைப் பொறுத்தமட்டில் உண்மையாக இருந்திருக்கலாம். [8]இயேசுவைத் தவிர வேறு எவரும் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாய்க் கடைப்பிடித்திருந்தது இல்லை; ஆனால் பரிசேயர்கள் தங்கள் சொந்த வழிகளில் முயற்சி செய்தார்கள். அவர்களில் சிலர், தாங்கள் அதைப் பூரணமாகக் கடைப் பிடித்திருந்ததாக நம்பியிருந்தனர் என்பது உறுதி. [9]பாவநிவிர்த்தி நாளைப் பற்றிய அறிவுறுத்தல், அவர்கள் தங்களையே ''வருத்திக்கொள்ளுதல்'' பற்றிக் குறிப்பிட்டது. இதை யூதர்கள் செய்த ஒரு வழிமுறையானது உணவின்றி (உபவாசித்து) இருத்தல் என்பதாக இருந்தது.*

தேவனால் நியமிக்கப்பட்டிருந்த இந்த வழிமுறையுடன் கூடுதலாக, இயேசுவின் காலத்தில், யூதர்களின் உபவாசித்தலுக்கென்று மற்றும் நான்கு தேசீய நாட்களைக் கூட்டியிருந்தனர். [10]ஏவுதல் பெற்றிராத பாரம்பரியத்தின்படி, மோசே சீனாய் மலையின்மீது ஒரு திங்கட்கிழமையன்று ஏறி, ஒரு வியாழக்கிழமையன்று அதினின்று இறங்கி வந்திருந்தார்.

[11]ஆஸ்திரேலியாவில், ஒரு "publican" என்பது (மது அருந்தும் இடமும் உணவகமும் இணைந்த) ஒரு பொது விடுதியை நடத்துபவரைக் குறிப்பதாக உள்ளது. நான் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்த காலத்தில், வேதாகமத்தில் publicans என்பவர்களைப் பற்றிக் கலந்துரையாடப்பட்டிருந்தது குறித்து ஒரு பெண்மணி கலக்கம் அடைந்தார். அந்தப் பெண்மணியின் கணவர் ஒரு பொதுவிடுதியை நடத்திக் கொண்டிருந்தார் என்பது தெரிய வந்தது. [12]"IRS" என்பது அமெரிக்காவில் வருமான வரிகளை வசூலிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்க அரசின் முகமையான "Internal Revenue Service" என்பதைக் குறிப்பதாக உள்ளது. [13]William Barclay, *And Jesus Said* (Philadelphia: Westminster Press, 1970), 101. [14]Neil R. Lightfoot, *The Parables of Jesus,* Part 2 (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 46. [15]அதாவது, இவர் விரோதிகளுக்கு(ரோம அரசாங்கத்திற்கு)த் தங்களை விற்றுப் போட்டவர் என்று அவர்கள் கருதினர். [16]அதனால்தான் மக்கள், இயேசு "ஆயக்காரர்களுக்கும் பாவிகளுக்கும் நண்பராக" இருந்தது பற்றி (மத். 11:19) அவ்வளவு திகைப்படைந்தார்கள். [17]Lightfoot, 46. [18]This sentence was adapted from Clovis G. Chappell, *Sermons from the Parables* (New York.: Abingdon-Cokesbury Press, 1933), 106. [19]மத்தேயு 6:7, புறஜாதியாரைப் பற்றிப் பேசுகிறது, ஆனால் கடிந்துகொள்ளு தலானது இந்த விஷயத்தில் புறஜாதியாரைப் போல் செய்த பரிசேயர்களுக்கானது என்று பல விளக்கவுரையாளர்கள் நம்புகின்றனர் (லூக். 20:47ஐக் காணவும்). [20]நகைச்சுவையின் தொடுதல் ஒன்று இவ்விடத்தில் ஏற்புடையது என்றால், "இவன் யாரைப் பற்றிப் பேசுகிறான் என்பதைத் தேவனிடத்தில் நிச்சயப்படுத்திக் கொள்ளும்படிக்கு" என்ற கூற்றைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

[21]Glen Pace, "The Universal Prayer," sermon preached at the Judsonia church of Christ, Judsonia, Arkansas, 2000. [22]Geoffrey W. Bromiley, gen. ed., "Woman," *The International Standard Bible Encyclopedia,* rev. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 4:1093-94. [23]"இரண்டாவது மைல்" என்ற சொல்லாக்கமானது மத்தேயு 5:41ல் இருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது. [24][மூட்டைப்] பூச்சிகளை ஒழிப்பவர், சிவப்பு எறும்புகள் ஒரு அங்குல நீளம் கொண்டவை என்று எனக்குக் கூறுகிறார்! நான் குறிப்பிடும் வகையைச் சேர்ந்தவை, எனது சிறு பிராயத்தில் நான் நினைவில் கொண்டுள்ளதில் இருந்து வருகின்றன. [25]இது நான் வாழ்கின்ற இடத்தில் உள்ள பொதுவான இரண்டு வகை எறும்புகளைப் பற்றிய விஞ்ஞானப் பூர்வமற்ற விவரிப்பாக உள்ளது. (பூச்சிகளை ஒழிப்பவர், சிறிய கறுப்பு எறும்புகளை "odiferous" எறும்புகள் என்று கூறுகிறார், ஆனால் அந்த வார்த்தை வாயில் நுழையாததாக உள்ளது.) நீங்கள் இந்த விவரிப்பைப் பயன்படுத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான எறும்புகளின் பெயர்களை [எடுத்துக்காட்டாக: கட்டெறும்பு மற்றும் சுள்ளெறும்பு போன்ற பெயர்களை] இவ்விடத்தில் பதிலுக்கு ஈடாக குறிப்பிடுங்கள். [26]உலகில் நான் வாழும் பகுதியில், பொது ஆராதனை ஊழியங்களில், குனிந்த தலைகளுடனும் மூடிய கண்களுடனும் ஜெபிக்கும் வழக்கம் உள்ளது. இந்தப் பழக்கமானது லூக்கா 18ன் ஆயக்காரரிடமிருந்து வந்திருக்கலாம். திறந்த கண்களுடன் ஜெபித்தல் என்பது வசன ரீதியானதாகவே உள்ளது. பல சந்தர்ப்பங்களில் (விசேஷமாக, அலைக்கழிப்பான நெடுஞ்சாலைகளில் நான் பயணம் செய்யும்போது) திறந்த கண்களுடன் ஜெபித்திருக்கின்றேன்; ஆனால்

*குனிந்த தலை என்பது தாழ்மையை மறைமுகமாய் உணர்த்துகிறது, மூடிய கண்கள் என்பது கவனச் சிதறல்களை விலக்குவதற்கு உதவுகிறது.* [27]*மெக்கார்வீ அவர்கள், இது "இவன் பெறுவதற்கு மிகவும் தகுதியானதாயிருந்த தேவனுடைய அடியை இவனுக்கு நினைவூட்டுவதற்கானதாக'' இருந்திருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தார்.* (J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 537.) *ஒருவேளை, இது உண்மையான காயங்களின் துன்புறுதல் அல்ல, ஆனால் ஒரு அடையாளச் செய்கையென்று நாம் கவனிக்க வேண்டும். இந்த உதாரணமானது குறிப்பிட்ட சில மதவாதிகள் சுயமாய் உறுப்புக்களைச் சிதைத்துக் கொள்ளுதலை நியாயப்படுத்துவது இல்லை. உடலானது தேவனுடைய ஆலயமாக உள்ளது (1 கொரி. 6:19) மற்றும் இது தவறாகப் பயன்படுத்தப்படக் கூடாது.* [28]*கிரேக்க மொழியில் இந்த ஜெபம் ஐந்தே ஐந்து வார்த்தைகளை மாத்திரமே கொண்டுள்ளது.* [29]*கிளென் பேஸ் அவர்கள், ''தனது பாவங்களை அறிக்கையிட்டு'' ஜெபங்களைக் கேட்க முன்வந்த ஒரு பெண்ணைப் பற்றிக் கூறினார். அவள், தான் வந்ததற்கான காரணத்தைப் பிரசங்கியாரிடம் கூறிக்கொண்டிருக்கையில், கூட்டத்தில் இருந்த இன்னொரு பெண்ணைச் சுட்டிக்காண்பித்து, "ஆனால் இது எல்லாம் அவளுடைய தவறாக உள்ளது!'' என்று ஒவ்வொருவரும் கேட்கப் போதுமான அளவுக்கு சத்தமாக முணுமுணுத்தாள்.* [30]*1 தீமோத்தேயு 1:15ல்* KJV*யில் பாவிகளில் எல்லாம் "பிரதான" பாவி என்றுள்ளது.*

[31]*எனது வேதாகமப் பிரதியின் மையக்குறிப்பில்* "Or, *propitious*" *என்றுள்ளது.* [32]*மக்கள் ஜெபிப்பதற்கென்று வழக்கமாகத் தேவாலயத்திற்கு எத்தனை முறை சென்றார்கள் என்ற கலந்துரையாடலை இந்தப் பாடத்தின் முதல்பாகத்தில் காணவும்.* [33]*ரோமர் 7:13ஐக் காணவும்.* [34]Michael Wilcock, *The Message of Luke: The Saviour of the World*, The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1979), 165. [35]Richard C. Trench, *Notes on the Parables of Our Lord* (Westwood, N.J.: Fleming H. Revell Co., 1953), 503. [36]R. C. H. Lenski, *The Interpretation of St. Luke's Gospel* (Minneapolis: Augsburg Publishing House, 1946), 906. [37]Pace. [38]G. Campbell Morgan, *The Parables and Metaphors of Our Lord* (Westwood, N.J.: Fleming H. Revell Co., 1942), 242. [39]The original story was in a book titled *Beside the Bonnie Brier Bush,* Chappell's version is in *Sermons from the Parables*, 113-14. [40]*உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நீங்கள், கிறிஸ்தவரல்லாதவர்களிடத்தில் தேவன் கேட்டுகொள்கின்றவைகளையும் (மாற். 16:15, 16), தவறு செய்கின்ற கிறிஸ்தவர்களிடத்தில் தேவன் கேட்டுக் கொள்கின்றவைகளையும் கூற விரும்புவீர்கள்.*